


**24. 12. 2025**

தலைப்புச் செய்திகள்

1. ஸ்ரீஹரிகோட்டா சத்திஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து LVM 3 - M 6 ராக்கெட் அமெரிக்காவின் செயற்கைகோளுடன் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது சுய சார்பு பாரதத்திற்கான சாதனையாக திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. வெளிப்படைத்தன்மை, திறன்மேம்பாடு, உள்ளடக்கம் போன்ற கட்டமைப்பு சீர்திருத்தங்களுடன் நம்தேசம் வெற்றிகரமாக முன்னேறி செல்வதாக குடியரசு துணை தலைவர் திரு. சி. பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

3. ஆரவல்லி மலை தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் தவறான தகவல்களை பரப்பி வருவதாக மத்திய சுற்று சூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் குற்றம் சாட்டியுள்ளார்.

4.சென்னை தீவு திடலில் 34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதி நவன குளிர்சாதன சொகுசு பேருந்துகளின் இயக்கத்தை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

5. தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ராமசந்திரனின் 38ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

## இனி விரிவான செய்திகள்

**********

### செயற்கைகோள்

ஸ்ரீஹரிகோட்டா சத்திஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து LVM 3 - M 6 ராக்கெட் அமெரிக்காவின் Blue Bird Block – 2 செயற்கைகோளுடன் இன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்கு குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் இஸ்ரோ விஞ்ஞானிகளை பாராட்டியுள்ளனர்.

அமெரிக்காவின் செயற்கைகோள் இந்தியாவின் ராக்கெட் மூலம் வெற்றிகரமாக புவி சுற்றுபாதையில் நிலை நிறுத்தப்பட்டது நம் நாட்டு விண்வெளி பாதை வெற்றியை பறைசாற்றும் மைல் கல்லாக திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சுய சார்பு பாரதத்திற்கான இந்தியாவின் சாதனையாக இது திகழ்வதாகவும், இந்த வெற்றிக்கு காரணமான இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் பொறியாயாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவிப்பதாகவும் கூறியுள்ளார்.

இந்திய இளைஞர்களின் ஆற்றலால் நாட்டின் விண்வெளி திட்டம் மேம்பட்ட முன்னேற்றத்துடன் ஆக்கப்பூர்வமான வளர்ச்சி பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும், ககன்யான் உள்ளிட்ட எதிர்கால விண்வெளி திட்டங்களுக்கான அடித்தளத்தை இஸ்ரோ வலுப்படுத்தி வருவதாகவும் கூறியுள்ளார்.

குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தமது செய்தியில் விண்வெளி துறையில் தலைமைத்துவ நாடாக இந்தியா உருவாகி வருவதோடு சுயசார்பு பாதையில் வெற்றிநடையில் முன்னேறி செல்வதாகவும் எடுத்துரைத்தார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா வெளியிட்டுள்ள செய்தியில் அமெரிக்காவின் செயற்கைகோள் விண்ணில் செலுத்தப்பட்டதன் மூலம் உலகளாவிய தொலைதொடர்பு மேம்படும் என்று கூறினார்.

இதனிடையே செய்தியாளர்களிடம் பேசிய இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன் இந்த தகவல் தொடர்பு செயற்கைகோள் புவி சுற்றுபாதையில் திட்டமிட்டபடி நிலைநிறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்திய மண்ணில் இருந்து ஏவப்பட்ட மிக அதிக எடை கொண்ட செயற்கைகோள் இது என்றும் கூறினார்.

முன்னதாக ஸ்ரீஹரிகோட்டா சத்தீஸ்தவான் விண்வெளி மையத்திலிருந்து காலை மணி 8.55க்கு LVM 3 - M 6 ராக்கெட் அமெரிக்காவின் Blue Bird Block – 2 செயற்கைகோளுடன் வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது.

அடுத்த தலைமுறைக்கான அகண்ட அலைவரிசை சேவையையும், ஸ்மார்ட் ஃபோன் செயல்பாட்டை முன்னெடுத்து செல்வதை நோக்கமாக கொண்டும் இச்செயற்கை கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**********

பிரதமர் - நீலகிரி

நீலகிரி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு நாளை நடைபெறும் பிரம்மாண்ட பரிசளிப்பு விழாவில் பிரதமர் திரு. நரேந்திர மோடி காணொலி வாயிலாக பங்கேற்கிறார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக விளையாட்டு வீரர்களுடன் பிரதமர் கலந்துரையாடவுள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் இதில் பங்கேற்கின்றனர்.

சென்ற மாதம் 21ஆம் தேதி தொடங்கிய இந்த விளையாட்டு திருவிழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்ற விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

மேட்டுப்பாளையம் அருகே சிறுமுகை ஆலாங்கொம்பு பகுதியில் அமைந்துள்ள SSVM CBSE பள்ளியில் நாளை காலை இந்நிகழ்வு நடைபெறுகிறது.

நாடாளுமன்ற விளையாட்டு போட்டிகளில் இளைஞர்கள் சிறப்பான விளையாட்டு திறனை வெளிப்படுத்தி உள்ள நிலையில் சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கான பயிற்சிக்கு பலர் தேர்ந்தெடுக்கப்பட உள்ளதாகவும் மத்திய விளையாட்டு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**********

சி.பி.ராதாகிருஷ்ணன்

வெளிப்படைத்தன்மை, திறன்மேம்பாடு, உள்ளடக்கம் அடிப்படையிலான கட்டமைப்பு சீர்திருத்தங்களுடன் நம்தேசம் முன்னேறி செல்வதாக குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் "மோடி ஆட்சி காலத்தில் பாரதத்தின் பொருளாதார ஆளுமை" என்ற தலைப்பிலான புத்தகத்தை இன்று வெளியிட்டு பேசிய அவர், பிரதமர் திரு.நரேந்திரமோடி தலைமையில் இந்தியா சிறப்பான பொருளாதார மாற்றங்களுடன் வெற்றிநடை போடுவதாக எடுத்துரைத்தார்.

உலகளாவிய நான்காவது பெரிய பொருளாதார நாடாக திகழும் இந்தியா 3ஆவது பொருளாதார நாடாக உருவெடுக்கும் வகையில் செயலாற்றி வருவதாகவும் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

**********

ஆரவல்லி

ஆரவல்லி மலை தொடர்பான உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு குறித்து காங்கிரஸ் உள்ளிட்ட சில எதிர்கட்சிகள் தவறான தகவல்களை பரப்பி வருவதாக மத்திய சுற்று சூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் குறை கூறியுள்ளார்.

ஆகாஷவாணி செய்திபிரிவிற்கு இன்று அவர் அளித்த பேட்டியில் எதிர்கட்சிகளின் இத்தகைய தவறான

தகவல்களுக்கு நாட்டு மக்கள் இரையாக மாட்டார்கள் என்றும் கூறினார்.

ஆரவல்லி மலை பகுதிகளில் முறைகேடான கனிம வள சுரண்டலை தடை செய்தே உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கும், தொழில் வளர்ச்சிக்கும் தேவையான தாது பொருட்களை உள்ளடக்கிய ஆரவல்லி மலைதொடரை பாதுகாக்க மத்திய அரசு உறுதியுடன் இருப்பதாக கூறினார்.

ஆரவல்லி மலை பகுதிகளில் காடு வளர்ப்பை ஊக்குவித்து சுற்றுச்சூழலை மீட்பதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**********

சிவ்ராஜ்சிங் சவ்ஹான்

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை வாய்ப்பு உறுதி - வாழ்வாதார திட்டத்தில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 95 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

ஆங்கில நாளிதழில் இன்று அமைச்சர் வெளியிட்டுள்ள கட்டுரையில் இத்தொகை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்திற்கான தொகையை காட்டிலும் 9 ஆயிரம் கோடி ரூபாய் அதிகம் என்றும் எடுத்துரைத்தார்.

இத்திட்டத்தை செயல்படுத்தும் முகமைகளாக மட்டும் இல்லாமல், மத்திய அரசுடன் வளர்ச்சி மற்றும் கட்டமைப்பு பங்குதாரர்களாக மாநிலங்கள் திகழ்கின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

**********

வேலூர்

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலை வாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார திட்டம் மூலம் 125 நாட்கள் வேலை வழங்கப்படுவதன் மூலம் தங்களது வாழ்வாதாரம் உயரும் என்று திருச்சி மற்றும் வேலூரை சேர்ந்த பயனாளிகள் தெரிவிக்கின்றனர்.

வாய்ஸ்

**********

முதலமைச்சர்

சென்னை தீவு திடலில் 34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 அதி நவீன குளிர்சாதன சொகுசு பேருந்துகளின் இயக்கத்தை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இதன்படி சென்னை, தஞ்சாவூர், மதுரை நெல்லை திருச்செந்தூர் சேலம் கோவை பெங்களூரு உள்ளிட்ட நகரங்களுக்கு இவை இயக்கப்படுகின்றன.

கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, மாவட்டங்களில் நாளை மறுநாள் அவர் ஆய்வு மேற்கொள்கிறார்.

கள்ளக்குறிச்சியில் 139 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தையும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் வேளாண் கண்காட்சியை திறந்துவைத்து அரசின் சார்பில் பல்வேறு நல திட்ட உதவிகளையும் அவர் வழங்க உள்ளார்.

**********

தந்தை பெரியார்

ஈ.வே.ராமசாமியின் 52ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதை ஒட்டி முதலமைச்சர் சென்னையில் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

**********

எம்.ஜி.ஆர்

தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ராமசந்திரனின் 38ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

அஇஅதிமுக பொதுச்செயலர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி சென்னை மெரினா கடற்கரையில் அன்னாரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினார்.

மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் அஇஅதிமுக சார்பில் அஞ்சலி செலுத்தப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் பள்ளிபாளையம் நான்கு சாலை பகுதியில் அஇஅதிமுக சார்பில் மௌண ஊர்வலம் நடைபெற்றது.

**********

கலந்தாய்வு

தமிழக அரசு கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பணியிட மாறுதலுக்கான கலந்தாய்விற்கு இன்றுமுதல் விண்ணப்பிக்கலாம்.

ஆசிரியர்கள் மட்டுமன்றி உடற்கல்வி இயக்குனர்கள், நூலகர்கள், தொழில்நுட்ப பணியாளர்களும் வரும் 5ஆம் தேதிவரை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

**********

கிறிஸ்துமஸ்

கிறிஸ்துமஸ் பண்டிகை நாளை கொண்டாடப்பட உள்ள நிலையில் இயேசு பிரான் பிறப்பை குறிக்கும் வகையில் இல்லங்களில் குடில் அலங்காரங்களுடனும், தேவாலயங்களில் மின்னொளி அலங்காரத்துடன் கேரல் நிகழ்ச்சிகளும் களை கட்டியுள்ளன.

நாகை மாவட்டம் வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை பேராலயத்தில் முதன்முறையாக கிறிஸ்துமஸ் மரம் திறக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

இருவரி

தமிழ்நாட்டில் மின் கம்பியாள் உதவியாளர் தகுதிக்காண் தேர்வு வரும் 27 மற்றும் 28 ஆகிய தேதிகளில் சென்னை கோவை திருச்சி தஞ்சாவூர் நாகை மதுரை திண்டுக்கல் உள்ளிட்ட 21 அரசு தொழில் பயிற்சி நிலையங்களில் நடைபெற உள்ளது.

விண்ணப்பதாரர்கள் அந்தந்த தொழிற்பயிற்சி நிலையங்கள் மூலம் தேர்வு நுழைவு சீட்டினை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாவட்டம் சொக்கிகுளம் ஆதி திராவிடர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளி கல்லூரி

மாணாக்கர் விடுதியை ஆட்சித்தலைவர் திரு.பிரவீன் குமார் இன்று ஆய்வு செய்தார்.

அரியலூர் தஞ்சாவூர் மாவட்டங்களில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்கள் தலைமையில் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 சிறப்பு முகாம் தொடர்பான விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கிவைத்தார்.

**********

கிரிக்கெட்

இந்திய - இலங்கைக்கு அணிகளுக்கிடையேயான 3ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் நாளை மறுநாள் நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 2-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது